# சிறுவர் ஜெப மலர்

(ஆண்டு சந்தா: Rs. 25/-)



2007ல்

## நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன்.

செப்பனியா 3:20



செடி : 5
மலர் : 1

ஆசிரியர்: J. செல்வக்குமார்

ஜனவரி
2007

# உங்கள் அங்கிளிடமிருந்து...



உங்கள் எல்லோருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் எனது அன்பான, ஆசீர்வாதமான, புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!

இந்தப் புதிய ஆண்டிலும் மீண்டுமாக இந்தச் சிறுவர் ஜெப மலர் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி! கடந்த வருடம் முழுவதும் நம்மைக் கண்ணின் மணிபோலக் காத்து நடத்தின ஆண்டவர், இந்தப் புதிய ஆண்டிற்குள்ளும் நாம் பிரவேசிக்கக் கிருபை கொடுத்திருக்கிறார்! கர்த்தரைத் துதியுங்கள்!

இந்த வருடமும்,2007ல், **“...நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன்.”** **(செப். 3:20)** என்று நமக்குக் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தத்தின்படி, உங்களுடைய படிப்பிலும், வாழ்க்கையிலும், எல்லாக் காரியங்களிலும் கீர்த்தியும், புகழ்ச்சியுமாக வைப்பது உறுதி! தினந்தோறும் இந்த வாக்குத்தத்தத்தைப் பிடித்து ஜெபியுங்கள்.

எனக்காகவும், இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.

இந்த **2007ம் வருடம், ஜனவரி மாதம் 28ம் தேதி, திருநெல்வேலி டவுணிலுள்ள, சேப்டர் மேல்நிலைப் பள்ளியில் மதியம் 1:30 முதல், 6:00 மணிவரை, பரீட்சை எழுதவிருக்கிற மாணவ, மாணவியருக்கான சிறப்புக் கூடுகை**யில் உங்களைச் சந்திக்க விரும்புகிறேன். நானும் உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் அங்கிள்,



# எவ்வளவு காலம்?

முட்டையிலிருந்து கோழிக்குஞ்சு வெளியே வர வேண்டுமென்றால், அந்தச் சிறிய ஓட்டுக்குள் 21 நாட்கள் அடங்கிக் கிடக்க வேண்டும்! தாய் யானை வயிற்றிலிருந்து குட்டி யானை வெளியுலகத்தைப் பார்க்க வேண்டுமென்றால், 640 நாட்கள் பொறுமையோடிருக்க வேண்டும்!

பரலோக வாசலை மனிதன் எட்டிப் பார்ப்பதற்கு எத்தனை வருடங்கள் காத்துக் கிடக்க வேண்டும்? கிறிஸ்துவின் வருகையில் மகிமையாய் நாம் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு இன்னும் எவ்வளவு காலம் இருக்கிறது? அதுமட்டும் இரகசியமாய் இருக்கிறது.

என் அருமை நண்பரும், கர்த்தருடைய ஊழியக்காரனுமான **சகோ. ஜாண் பிளசிங்,** கடந்த ஆண்டு மகிமைக்குள் பிரவேசித்தார். 35வது வயதைக்கூட அவர் நெருங்கவில்லை. ஆனால், அவர் எப்பொழுதும் பரலோகத்தைப் பற்றியே பேசி மகிழ்வார். தேவ தூதர்கள் தன்னைச் சந்தித்ததாகச் சொல்வார். “இதுவரை பூமியில் இந்த சரீரத்தோடு என் இரட்சருக்கு ஊழியம் செய்தேன். இனிப் பரலோகத்திற்குச் சென்று, என் ராஜாதி ராஜாவிற்கு ஊழியம் செய்வேன்” என்று சொல்லி நித்தியத்திற்குள் கடந்து போனார்.

மண்ணான இந்த சரீரத்திலிருந்து மகிமையான சரீரத்திற்காக நாம் ஏங்கித் தவிக்கிறோம். ஒவ்வொரு வண்ணத்துப் பூச்சியும் முதலில் புழுவாய் இருந்து, இலைகளை சாப்பிட்டு வளர்ந்தவைதான். புழு நிலையில், தான் வண்ணத்துப் பூச்சியாய் சிறகடித்துப் பறந்து போகப் போவதைப் பற்றி எள்ளளவும் நினைத்துக்கூடப் பார்த்திருக்காது! ஆனால், அந்தப் புழுவிற்கு என்ன ஒரு மகிமையான மாறுதல்!?

மரணம் ஜெயமாக விழுங்கப்படும்போது, நமக்கு எத்தனை மகிழ்ச்சி! அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும்! அல்லேலூயா!

**‘‘...கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்.’ I கொரி. 15:51.**

........................................................................................

# தயவு!



**‘தயவு’** என்றால் என்ன?

ஒரு ஓய்வுநாள் பள்ளி வகுப்பு உற்சாகமாக நடந்து கொண்டிருந்தது. அந்த வகுப்பை நடத்திக் கொண்டிருந்த ஆசிரியை மாணவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்.

‘தயவு என்றால் என்ன?’

வகுப்பறையில் நீண்ட அமைதி நிலவியது. பின் வரிசையில் அமர்ந்திருந்த ஒரு மாணவன் மெல்ல எழுந்தான்.

எல்லோருடைய கண்களும் அவனை நோக்கித் திரும்பியது.

அவன் சொன்னான் : “டீச்சர், நான் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் பசியோடு தவிக்கும்போது, ஒருவன் ஒரு ரொட்டித் துண்டு எனக்குக் கொடுத்தால்; அது அன்பு. அந்த ரொட்டித் துண்டில் கொஞ்சம் வெண்ணையும் தடவிக் கொடுத்தால்; அதுதான் தயவு!”

அவனுடைய பதில் வேடிக்கையாக இருந்தாலும், அதில்தான் எவ்வளவு அர்த்தங்கள்! அன்பு கனிந்து, தயவு வெளிப்படுகிறது. தயவுக்குப் பின்னால் அன்பு பரிமளிக்கிறது!

**நீங்கள் ஒருவருக்கொருவர் தயவாயிருங்கள் (எபேசியர் 4:32).**

.............................................................................................

## ENTRANCE KEYWORD



## பட்டாணியா?

## அல்லது

## வாழைப்பழத் தோலா?

மதியச் சாப்பாட்டு வேளை! அம்மா, குட்டித் தம்பி சசிக்கு அவித்த பட்டாணியை ஊட்ட முயன்று கொண்டிருப்பதை கவிதா வேடிக்கையாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். அம்மா கரண்டியில் எடுத்துக் கொண்டு வரும் பட்டாணியைச் சாப்பிட சசி மறுத்துக் கொண்டிருந்தான்.

“அம்மா, அவனுக்குக் கொஞ்சம் மாம்பழ ஜாம் கொடுங்கள். அவனுக்கு அது பிடித்தமானது!” என்று கூறினாள் கவிதா.

"அது சரியல்ல! அவனுக்கு அவசியமானதை அவன் சாப்பிடக் கற்றுக் கொள்ள வேண்டும்'' என்று அம்மா கூறினார்கள்.

சசி தொடர்ந்து சாப்பிட மறுத்தான். அம்மா அவனைக் கீழே இறங்கி விட்டார்கள். "பசித்தால் அவன், தானே சாப்பிட வருவான்" என்று கூறினார்கள்.

கொஞ்ச நேரம் கழிந்தது. சமையலறைக் கதவுக்குப் பின்னால் ஏதோ ஒரு சத்தம் கேட்டு கவிதா மெல்ல எட்டிப் பார்த்தாள். அங்கே சசி குப்பைக் கூடையைக் கவிழ்த்துப் போட்டுக் கிளறிக் கொண்டிருந்தான். ஒரு வாழைப்பழத் தோலை எடுத்து அவன் வாயில் வைப்பதைக் கண்டு, கவிதா திடுக்கிட்டாள். "அம்மா...அம்மா...இங்கே வந்து பாருங்கள்!" என்று சத்தம் போட்டாள்.

அம்மா வேகமாக ஓடி வந்தார்கள். சசியைத் தூக்கி இடுப்பில் வைத்து, அவன் கையிலிருந்த தோலைப் பிடுங்கி தொலைவில் எறிந்தார்கள். "என்ன இது? நானோ உனக்கு நல்ல உணவு தயாரித்து வைத்திருக்கிறேன். நீயோ குப்பைக் கூடையைக் கிளறிக் கொண்டிருக்கிறாய்!" என்று கடிந்து கொண்டார்கள்.

ஆனால், சசியோ அதைப் புரிந்து கொள்ளவில்லை. குப்பைக் கூடையைக் காட்டியபடியே அழுது அடம்பிடித்தான். இறுதியில் அம்மா அவனை மரக் கட்டிலில், கீழே இறங்க முடியாதபடி கிடத்தி விட்டார்கள்.

"எவ்வளவு மடத்தனம் இது? தனக்கு எது நல்லது என்று சசிக்குத் தெரியவில்லையே, அம்மா!" என்று அங்கலாய்த்தாள் கவிதா.

"ஆமாம், அவனுக்குத் தெரியவில்லை" என்று கூறிய அம்மா, மேலும் தொடர்ந்தார்கள். ''பெரும்பாலான கிறிஸ்தவர்களும்கூட இதைத் தெரிந்து கொள்வதில்லை. தேவன் நமது மகிழ்ச்சிக்காகவும், வளர்ச்சிக்காகவும் அளித்துள்ள காரியங்களை நாம் புறக்கணிக்கிறோம். உலகப்

பிரகாரமான காரியங்களாலும், கேளிக்கைகளாலும் நமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முயல்கிறோம். ஆண்டவருடைய காரியங்களோடு ஒப்பிடும்போது, இவை வெறும் குப்பைகளே! அவை தேவையான பட்டாணிகள் அல்ல; வெறும் தோல் மட்டுமே!" என்றார்கள் அம்மா.

**உன் நிலை என்ன?**

உன் வாழ்க்கையில் தேவை இருக்கிறதா? நண்பர்களுக்காக, ஆவிக்குரிய வளர்ச்சிக்காக, மகிழ்ச்சிக்காக, சாதனை உணர்விற்காக! அவசியம் உலகக் காரியங்கள் ஒருபோதும் இந்தத் தேவைகளைச் சந்திக்க முடியாது. தேவனே அதைச் சந்திக்க இடங்கொடு. அவருடைய திருவசனத்தை வாசி. அவரோடு பேசு. மற்ற கிறிஸ்தவர்களோடு சேர்ந்து அவரைத் துதித்துப் பாடு. உன் தேவை எதுவாக இருந்தாலும், தேவன் அதை நிறைவேற்ற இடம் கொடு.

**தேவன் தேவைகளைச் சந்திக்கிறார்!**

---

# பேட்டி!

***அன்பார்ந்த வாசகரே!***

***இந்த வருடம், ஆண்டவரால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பல உயிருள்ள சாட்சிகளைப் பேட்டியெடுத்து, வெளியிட இருக்கிறோம். இந்த மாதம், அமெரிக்காவில் பிறந்து, மிஷனெரியின் மகனாய் இந்தியாவில் வளர்ந்த, கர்த்தரால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிற*** **சகோ. டேவிட் ஸ்டுவர்ட் (ஜூனியர்)** ***அவர்கள், நாலுமாவடி வந்திருந்தபோது, சிறுவர் ஜெபமலர் என்றதும், உற்சாகமாய் தந்த பேட்டி இதோ... வாசித்துப் பயனடையுங்கள்!***



**சகோ. தாஸ்** : Praise the Lord! உங்கள் பெயர், ஊர், குடும்பம் பற்றிச் சொல்ல முடியுமா?

**சகோ. ஸ்டூவர்ட்** : என் பெயர், டேவிட் ஸ்டூவர்ட் (ஜூனியர்). என் தகப்பனார் பெயர், டேவிட் ஸ்டூவர்ட் (சீனியர்). என் தாய் லாய்ஸ் ஸ்டூவர்ட். என் தாய்க்கு அவருடைய 30வது வயதில் ஆண்டவர் ஒரு தரிசனத்தைக் கொடுத்தார். அவர்கள் ஒரு சிறிய, எளிமையான விவசாயக் குடும்பத்தில் அமெரிக்காவில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய தகப்பனாருக்கு 100 ஏக்கர் நிலம் இருந்தது. அவர்கள் ஒரு சிறு அசெம்பிளி ஆப் காட் சபைக்குச் சென்று வந்தார்கள். ஒருநாள் ஆண்டவர், அவர்களுக்கு, **NORTH KERALA**வைப் பற்றி ஒரு தரிசனத்தைக் கொடுத்தார். அவர்களுக்கு இந்தியாவைப் பற்றி ஒன்றும் தெரியாத சூழ்நிலையில் ஆண்டவர் அவர்களுக்கு **BROWN** நிற தோலுடைய மக்களைக் குறித்த தரிசனம் கொடுத்தார்.

ஒருநாள், என் தாயார் நூலகத்தில் இருக்கும்போது, ஒரு பெரிய தலைப்பைக் கொண்ட ஒரு செய்தித்தாளைப் பார்த்தார்கள். அது ஒரு கிறிஸ்தவ செய்தித்தாள் கிடையாது. அதில் இந்தியாவைப் பற்றியதான ஒரு செய்தி இருந்தது. அதில், "இந்தியாவிற்கு இனி நம்பிக்கையில்லை!" என்று எழுதப்பட்டிருந்தது. என் தாயார் அதைப் படிக்கத் தொடங்கினார்கள். பரிசுத்த ஆவியானவர், "இந்தியாவிற்கு இயேசுவின் மூலமாய் நம்பிக்கை உண்டு!" என்று பேசினார். என் தந்தை ஒரு எலெக்ட்ரிக்கல் இன்ஜீனியராக வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டு பல ஸ்காலர்ஷிப்புகளுக்காக கல்லூரிகளில் விண்ணப்பித்தார்.

கல்லூரியில் சேர்வதற்கு ஒரு மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு முன்பாக என் தந்தையின் தகப்பனார் அவரிடம், "மகனே, என்றைக்காவது வேதாகமக் கல்லூரி செல்வதைக் குறித்து யோசித்திருக்கிறாயா?" என்று கேட்டார். என் தகப்பனார், "அதெல்லாம் முடியாது. நான் ஒரு எலெக்ட்ரிக்கல்

இன்ஜீனியராக வேண்டும்" என்றார். அதைக் குறித்து ஜெபிக்கும்படி என் தந்தையை அறிவுறுத்தினார் அவர் தகப்பன்.

என் தகப்பனாரும் ஜெபம் செய்து, தான் ஒரு வருடம் வேதாகமக் கல்லூரிக்குச் செல்வதாகக் கூறினார். ஒருநாள் தன்னுடைய வேதாகமக் கல்லூரியில் உள்ள சிற்றாலயத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் பங்கு பெற்று இந்தியாவிற்குச் செல்வதற்கான அழைப்பைப் பெற்றார். அதன்பின் அவருக்குத் திருமணம் ஆனது. அந்த நாட்களில் இந்தியாவிற்கு வருவதற்கான வாய்ப்புகளே இல்லை. பின்பு, பல கஷ்டங்களின் மத்தியில் ஆண்டவர் அவர்களுக்கு இந்தியா செல்வதற்கான கதவைத் திறந்தார்.

இதற்காக என் பெற்றோர் பல மிஷனெரி இயக்கங்களை அணுகினர். ஆனால் அவர்களோ, "இது முடியாது" என்று கூறி விட்டனர். அவர்கள் என் பெற்றோரிடம், "உங்கள் இரண்டாவது **CHOICE** என்ன?" என்று கேட்டார்கள். ஆனால் அவர்களோ, "இதுவே எங்கள் ஒரே **CHOICE**" என்று கூறி விட்டார்கள். ஆண்டவர் கதவைத் திறந்தார். 1965ல் நாங்கள் இந்தியாவிற்கு வந்தோம். நாங்கள் பல இடங்களில் பிரயாணம் செய்து, கடைசியாக கொடைக்கானலுக்கு வந்து ஒரு வீட்டில் குடியேறினோம். அதே வீட்டில்தான் இன்றும் வாழ்கிறேன்.

**சகோ. தாஸ்** : நீங்கள் எங்கு பிறந்தீர்கள்?

**சகோ. ஸ்டூவர்ட்** : அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1960ல் பிறந்தேன். எனக்கு 5 வயதாயிருக்கும்போது இந்தியாவிற்கு வந்தோம்.

**சகோ. தாஸ்** : உங்கள் தகப்பனார் ஒரு ஊழியக்காரராய் இருந்தபடியினால், நீங்கள் கண்டிப்பாக வளர்க்கப்பட்டீர்களா?

**சகோ. ஸ்டூவர்ட்** : என் பெற்றோர் கண்டிப்பானவர்கள் என்றாலும், அன்பானவர்கள். ஒரு நல்ல தகப்பனாராக நான் சொல்லக் கூடியது என்னவென்றால், அன்போடு கூடிய கண்டிப்பு தேவை. புறஜாதி மாணவர்கள் செய்யக் கூடிய

எல்லாக் காரியங்களையும் என் பெற்றோர் நான் செய்ய அனுமதிக்கவில்லை. குறிப்பாக டி.வி. பார்ப்பதையும், சினிமா பார்ப்பதையும் முழுமையாகக் கண்டித்தனர். இன்றும் எங்கள் வீட்டில் டி.வி. பார்க்க மாட்டோம். ஏனென்றால், **வார்த்தை என்பது விதையைப் போன்றது.** அது வாலிபப் பிள்ளைகளை தவறான பாலிய இச்சைகளுக்குள் இழுத்துச் செல்லும். என்னை என் பெற்றோர் நல்ல முறையில் வளர்த்ததற்காக நான் அவர்களுக்கு நன்றி உள்ளவனாய் இருக்கிறேன்.

**சகோ. தாஸ்** : எப்பொழுது இரட்சிக்கப்பட்டீர்கள்?

...தொடரும்.

..................................................................................................



# வேதாகம துணுக்குகள்!

## தீர்க்கதரிசிகள்

சாமுவேலின் காலத்தில் இரண்டு வகை தீர்க்கதரிசிகள் இருந்தனர். ஒருவகை தீர்க்கதரிசிகளுக்கு, "**ஞானப்பார்வை தீர்க்கதரிசிகள்**'' என்றும், இரண்டாம் வகை தீர்க்கதரிசிகளுக்கு, "**ஞானவுரைத் தீர்க்கதரிசிகள்**" என்றும் பெயர். ஞானப்பார்வைத் தீர்க்கதரிசிகள், தங்கள் ஆன்மக் கண்கள் திறக்கப்பட்டு ஆவிக்குரிய காரியங்களை காட்சிகளாகக் கண்டு சொல்பவர்கள். ஞானவுரைத் தீர்க்கதரிசிகள், ஆவியின் ஏவுதலினால் பரவசமடைந்து, நடக்கப் போகிறதை உரைப்பவர்கள். வீடு திரும்பும்போது சவுல் இந்த ஞானவுரைத் தீர்க்கதரிசிகள் கூட்டத்தில்தான் சேர்ந்து கொண்டார்.

## கானான் கோடை!

கானான் தேசத்தில் கோடைக்காலம் என்பது, செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்கள்தான். இந்த மாதங்களில் அரேபியா பாலைவனத்திலிருந்து வீசும், '**சிராக்கஸ்**' என்ற காற்று, மிகுந்த வெப்பமும், வறண்டதுமாகும். இந்தக் காற்று வீசும் காலங்களில் தேசத்தில் மிகுந்த உஷ்ணமும், வறட்சியும் உண்டாகும்.

......................................................................................................

# வாழ்க்கை வரலாறு

## ஜேம்ஸ் பிரேசர்



தொடர்ச்சி...

1911ம் ஆண்டு அக்டோபர் மாதம், மஞ்சு ஆளுகையை எதிர்த்து சீன தேசியவாதிகளுடைய போராட்டம் வலுப்பெற்றது எங்கும் சண்டைகளும், கலவரங்களும் அதிகரித்து வந்தன!

அந்த வேளையில், “வெளி நாட்டவர்கள் நாட்டில் இருப்பது அபாயகரமானது!” என்று கூறிய பிரிட்டிஷ் தூதரக அதிகாரி, அப்பொழுது பிரிட்டிஷ் ஆளுகையிலிருந்த பர்மாவுக்குச் சென்று, கலவரம் முடியும் வரை அங்கேயே இருக்கும்படி பிரேசரிடம் கேட்டுக் கொண்டார்.

ஆனால், அருட்பணிப் பொறுப்புகளை விட்டுச் செல்ல பிரேசருக்கு விருப்பமில்லை. என்றாலும், கலவரம் டெங்குவை எட்டியபோது, தொடர்ந்து அங்கே அவரால் இருக்க முடியவில்லை.

தன்னிடமிருந்த பணம் முழுவதையும் தனது சீன மொழி ஆசிரியரிடமும், சமையல்காரரிடமும் கொடுத்த பிரேசர், அவர்கள் தங்கள் தேவைகளைக் கவனித்துக் கொள்ள அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். அருட்பணி மாளிகையை அவர்கள் பொறுப்பில் விட்டு விட்டுப் புறப்பட்டார்.

தொடர்ந்து எட்டு நாட்கள் மலைப் பாதையில் பயணம் செய்த பிரேசர், 'பாமோ' என்ற இடத்திலிருந்த அருட்பணி மாளிகைக்கு வந்து சேர்ந்தார். அங்கே அருட்பணியாளர்களை, 'செல்கிரிக்' தம்பதியரோடு தங்கியிருக்கும்படி பிரேசர் திட்டமிட்டிருந்தார். ஆனால், அவர்கள் அங்கே சென்றபோது, செல்கிரிக் தம்பதியர் அங்கே இல்லை. உடல்நலக் குறைவு காரணமாக, அவர்கள் தாய்நாட்டிற்கு விடுமுறையில் சென்றிருந்தார்கள்.

கையில் பணமில்லாத பிரேசர் திடுக்கிட்டார். ஆனால், நல்ல வேளையாக செல்கிரிக் தம்பதியர், சில உணவுப் பொருட்களை மாளிகையில் வைத்து விட்டு, "எவரேனும் அருட்பணியாளர் வந்தால், அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்!" என்று எழுதி வைத்திருந்தனர்.

அந்த உணவுப் பொருட்கள் சில நாட்களுக்கு மட்டுமே போதுமானவைகளாக இருந்தன. என்றாலும், பிரேசர் மனம் தளரவில்லை. விசுவாசத்தோடு தனது தேவைகளை ஆண்டவரின் கரங்களில் சமர்ப்பித்து விட்டு ஊழியத்தில் ஈடுபட்டார்.

அருட்பணி மாளிகையிலிருந்த கைப்பிரதிகளை ஊருக்குள் விநியோகம் செய்தார். அவர் சீன ஆடை தரித்திருந்தபடியால், பாமோ நகரத்தில் சீனர்கள் வாழும் பகுதிக்குச் சென்று தேநீர் விடுதிகளுக்கு வரும் சீனர்களிடையே உரையாடி, அவர்களுக்கு நற்செய்தியை அறிவித்தார். அருட்பணி மாளிகையிலிருந்த உணவுப் பொருட்கள் தீர்ந்துபோகும் நாளும் நெருங்கியது!

ஞாயிற்றுக்கிழமை ஆராதனை முடிந்தவுடன் ஒரு பர்மியப் பெண்மணி தனது கணவரோடு பிரேசரிடம் வந்தாள். சீனாவிலிருந்து வந்த அவருடைய சிரமத்தை, தான் புரிந்து கொண்டிருப்பதாகக் கூறிய அவள், அவரிடம் ஒரு பொட்டலத்தை நீட்டினாள். அதில் ஐந்து ஒரு ரூபாய் வெள்ளி நாணயங்கள் இருந்தன. ஆனால், அவற்றை ஏற்றுக் கொள்ள பிரேசர் மறுத்தார்.

அந்த விசுவாச தம்பதியினர் அவரை வற்புறுத்தினார்கள். இறுதியில் ஒரேயொரு நாணயத்தை மட்டும் பிரேசர் எடுத்துக் கொண்டார்.

அந்த ஒரு நாணயம், அவரது சில நாள் தேவைகளைக் கவனிக்கப் போதுமானதாக இருந்தது!

– தொடரும்.

.........................................................................................

# கேள்வி – பதில்கள்!

கடந்த 2006 நவம்பர் மாதம் சிறுவர் ஜெப மலரில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சரியான பதிலை எழுதி யனுப்பியவர்களின் பெயரையும், இடத்தையும் இங்கே குறிப்பிட்டுள்ளோம். அவர்களுக்கு எங்களது பாராட்டுக்கள்!

## WINNERS OF NOVEMBER - 2006

| NAME | PLACE |
|---|---|
| 1. Jeyam Moses | Munnar |
| 2. Samraj C. Manimaran | Palayamkottai |
| 3. Hersom T. Thomas | Madayapatty Estate |

| | |
|---|---|
| 4. S.M. Nalji | Nagercoil |
| 5. Stephen Mesak | Nazareth |
| 6. M. Achsah | Nagercoil |
| 7. D. Sujana | Coimbatore |
| 8. A. Brightline | Thoothukudi |

## நவம்பர் மாத கேள்விகளுக்கான பதில்கள்!

| | |
|---|---|
| 1. யாக்கோபு | (ஆதி. 27:12) |
| 2. மோசே | (யாத். 18:6-8) |
| 3. பவுலின் சகோதரியின் மகன் | (அப். 23:12-35) |
| 4. எத்திரோ | (யாத். 18:11,12) |
| 5. கர்த்தருடைய தூதனானவர் | (ஆதி. 22:11,12) |
| 6. சாறிபாத் ஊர் விதவை | (I ராஜா. 17:24) |
| 7. நாகமான் | (II ராஜா. 5:15) |
| 8. ரூத், அபிகாயில் | (ரூத். 2:10, I சாமு. 25:23) |
| 9. தாவீது – யோனத்தான் | (I சாமு. 20:41) |
| 10. அப்சலோம் | (II சாமு. 14:33) |

# இம்மாதத்திற்கான கேள்விகள்!

**1. ‘‘கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்’’ என்று வாசிப்பதெங்கே?**

**2. “கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்” என்று வாசிப்பதெங்கே?**

3. **“எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான்” யார்?**
4. **“எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான்” யார்?**
5. **“என்னை இரட்சியும்!” என்று சொன்னவர்கள் யார்?**
6. **“என்னை இரட்சியும்!” என்று சொன்னவள் யார்?**
7. **“என்னை ஆசீர்வதியும்!” என்று சொன்னவன் யார்?**
8. **“என்னை பலப்படுத்தும்!” என்று சொன்னவன் யார்?**
9. **“என்னைச் சுத்திகரியும்!” என்று சொன்னவன் யார்?**
10. **“என்னைக் குணமாக்கும்!” என்று சொன்னவன் யார்?**

நீங்கள் பதில் எழுதி அனுப்ப வேண்டிய முகவரி :–

**(இம்மாதம் முதல் 20ம் தேதிக்குள்ளாக சரியான பதிலை தெளிவான முகவரியுடன் அனுப்புகிறவர்களுக்கு ஒரு நல்ல பரிசு தபாலில் வந்து சேரும்.)**

நீங்கள் பதில் எழுதி அனுப்ப வேண்டிய முகவரி;-

**Bro. R.N. Devadoss,**
**31, Sivagangai Road,**
**Immanuel Clinic,**
**(Upstairs, Near Mini Studio)**
**Anna Bus Stand, Madurai-625 020.**
**(Phone : 0452- 2531305)**

# ஜெபக் குறிப்புகள்!

அன்பார்ந்த ஜெப வீரரே,



கடந்த மாதங்கள் முழுவதும் கர்த்தர் நம் ஜெபத்தைக் கேட்டு, பதில் கொடுத்தமைக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். இதோ... இம்மாத ஜெபக் குறிப்புகள்!

**1வது வாரம் :-**

1. புதிய வருடத்தில் புதிய கிருபைகளைப் பெற்றுக் கொள்ள ஸ்தோத்தரித்து ஜெபிப்போம்.
2. 2007ம் வருடத்தைக் கர்த்தர் நன்மையினால் முடிசூட்ட ஜெபிப்போம்.
3. தேசமெங்கும் உள்ள கர்த்தருடைய ஊழியக்காரர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.
4. சகோ. மோகன் சி. லாசரஸ், சகோ. அப்பாத்துரை மற்றும் இயேசு விடுவிக்கிறார் ஊழியர்களுக்காக ஜெபிப்போம்.
5. இந்திய ஜனாதிபதி மற்றும் பிரதமருக்காக ஜெபிப்போம்.
6. 2010ல் ஆசீர்வாதமான தமிழ்நாட்டைக் காண போராடி ஜெபிப்போம்.

## 2வது வாரம் :-

1. தமிழ்நாட்டு முதலமைச்சர் மற்றும் ஆளுநருக்காக ஜெபிப்போம்.
2. இந்த வருடம் முழுவதும் நடைபெறவிருக்கிற இயேசு விடுவிக்கிறார் விடுதலைப் பெருவிழாக்களுக்காக ஜெபிப்போம்.
3. இந்த வருடத்தில் நடைபெறவிருக்கும் சிறுவர் விழா மற்றும் இளம் வாலிபர் முகாம்களுக்காக ஜெபிப்போம்.
4. மத்திய அமைச்சர்களுக்காக ஜெபிப்போம்.
5. தீவிரவாதிகள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.
6. இயேசு அழைக்கிறார் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## 3வது வாரம் :-

1. இந்திய அரசியல் தலைவர்களுக்காக ஜெபிப்போம்.
2. ஆர். எஸ். எஸ். மற்றும் இந்து முன்னணிக்காக ஜெபிப்போம்.
3. நாலுமாவடி–தேவனுடைய கூடாரம் சீக்கிரமாகக் கட்டி முடிக்கப்பட ஜெபிப்போம்.
4. இலங்கையில் அமைதி ஏற்பட ஜெபிப்போம்.
5. இந்திய ராணுவத்தினருக்காக ஜெபிப்போம்.
6. தேசமெங்கும் வேலை வாய்ப்புகள் பெருக ஜெபிப்போம்.

**4வது வாரம் :-**

1. தமிழ்நாட்டு அமைச்சர்களுக்காக ஜெபிப்போம்.
2. மிஷனெரிகளின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.
3. தேவ ஊழியர்களுடைய குடும்பம் மற்றும் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.
4. அண்டை நாட்டின் தீவிரவாத செயல்பாடுகள் அழிக்கப்பட, அவர்கள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
5. இந்தியாவில் பரவி வருகிற எல்லா கொள்ளை நோய்களும் அழிக்கப்பட ஜெபிப்போம்.
6. இந்தியா இரட்சகரைக் கண்டு கொள்ள ஜெபிப்போம்.

---



# செ ய் தி க ள் !

× இலங்கையில் வன்முறை கட்டுப்படுத்த முடியவில்லை. முன்னாள் இலங்கை பிரதமர் திரு. ரணில் கவலை. (நன்றி : தினமலர்)

× தாத்தாவைக் கத்தியால் குத்தின பேரன் கைது. (நன்றி : தினகரன்)

× மாணவர்களிடம் பணம் மோசடி. மதுரை–பாரா மெடிக்கல் கல்லூரி நிர்வாகம் கைது.

× அமீர் மஹாலுக்கு குண்டு வைத்ததாக 8 முறை மிரட்டிய 8 வயது சிறுவன் கைது.

× இந்தியப் பெருங்கடலில் சுனாமி எச்சரிக்கை மிதவை.

× சாதனை : மும்பையில் 1 சதுர அடி நிலம் விலை ரூ.73,000/–

× ஈவ்–டீசிங்கால் போடியில் பள்ளிக்கூட மாணவி தற்கொலை.

× மதுரை–விமான நிலையம் நவீனப்படுத்தப்படும் – அமைச்சர் திரு. பிரபு படேல் தகவல்.

× பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிக்கு இனி நுழைவுத் தேர்வு இல்லை. மசோதா நிறைவேற்றம்.

× தவறான காரியத்தில் ஈடுபடுத்தக் கடத்தப்பட்ட மாணவிகள் மீட்பு.

× +2 செயல்முறை உள்ள பாடங்களில் இந்த வருடம் முதல், எழுத்துத் தேர்வில் 150க்கு 30 மதிப்பெண்கள் எடுத்தால் பாஸ்.

× +2வில் 1000க்கு 100 எடுத்தால் சிறப்புச் சான்றிதழ் தமிழ்நாடு அரசு அறிவிப்பு.

× புதையல் எடுக்க தன் சொந்த மகனை நரபலி கொடுக்க முயன்ற தந்தை கைது.

Regd. Magazine No:TNTAM/2003/10126
Regn. No: TN/TTN/04/2006-2008
Post W.P.P. No: TN/WPP-82/SR/
2006-2008 (WITHIN INDIA)

குட்டிப் பிள்ளைகளே !

ஞாயிறுதோறும்

மாலை 4:00-4:30 மணி வரை

**தமிழன் டி.வியில்**




பார்த்து மகிழுங்கள் !

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாக இருங்கள் !

எங்கள் முகவரி

**சிறுவர் ஜெபமலர்**

**இயேசு விடுவிக்கிறார்,**

**நாலுமாவடி-628 211. தூத்துக்குடி மாவட்டம்.**

Ph: (04639) - 235305, 235705 Fax:(04639)-235415

*Email: info@jesusredeems.com*
*Web Site: http://www.jesusredeems.com/*

24 மணி நேர ஜெப உதவிக்கு

**04639 - 235 315**

Owned and Published by **J. Selvakumar** from Jesus Redeems, Nalumavadi-628 211
and Printed by Mrs.Joyce Lazarus at Angel Press, 13/81A, Lakshmipuram,
Nalumavadi-628 211. EDITOR **J. SELVAKUMAR**